# எலியா என்னும்
# தேவனுடைய மனிதனும், நாமும்

**நோக்கம்:**

கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொரு நபர்களுமே தேவனுடைய மனிதர்களாயிருக்கிறார்கள். ( 2 தீமோ 3:16,17; 1 கொரி 6:20 ).ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் தேவனுக்காகவே பிழைத்திருக்கிறோம்(ரோமர் 6:11-13). அதாவது தேவனுடைய மனிதர்களாய் இருக்கிறோம். இப்படிப்பட்ட நாம் எப்படிப்பட்டவர்களாய் வாழ வேண்டும் என்பதையும், நம்முடைய இலக்கும்; நோக்கமும் என்ன எனபதை? புரிந்துக்கொள்வதே இந்த பாடத்தின் நோக்கம். இதை தேவனுடைய மனுசனாகிய எலியாவின் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்வோம். "**நீங்கள் தேவனுடைய மனுசனாய் வாழ விரும்புகிறீர்களா?"**

1. **தேவனுடைய மனுசன் தேவனுக்கு முன்பு நிற்கிறான். (1 இராஜா 17:1; 18:15)**

அ. தேவன் நம்மை பார்த்துக்கொண்டே இருக்கிறார் (நீதி 5:21; எரே 17:10)

1. தேவனுடைய கண்களுக்கு மறைவாக எங்கே போக முடியும் (சங் 139:7)

உதாரணம்: யோனா (யோனா 1:4;17)

உதாரணம்: எலியா ( 1 இராஜா 19:3-9)

ஆ. தேவனுக்கு முன்பாக நாம் உத்தமனாய் நிற்க ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் (2 தீமோ 2:15). இதை நம்மால் புரிந்துக்கொள்ள முடியும்.

1. யோபு (யோபு 1:1)
2. நோவா (ஆதி 6:8,9)
   - தேவனுடைய வார்த்தையை கைக்கொள்வதில் உத்தமமாய் இருப்பது (ஆதி 6:22)
   - தேவனுடைய வார்த்தையை போதிப்பதில் உத்தமமாயிருப்பது (2 பேது 2:5)
3. மோசே (எபி 3:5)
4. தாவீது (சங் 78:70-72; அப் 13:22)

குறிப்பு: தாவீது பாவம் செய்த பின்பும், அவனை உண்மையுள்ளவனாய் மாற்றியது எது? உண்மையுள்ளவனாயிருப்பது உத்தமனாயிருப்பதை போல காண்பித்துக் கொள்வது அல்ல. உண்மையில் தான் எப்படிப்பட்டவன் என்பதை புரிந்து அவருக்கு கீழ்ப்படிவது.

5. சங்கீதம் 15

இ. தேவனுக்கு முன்பாக நாம் இருக்கிறோம் என்பது நம்மை சரி செய்துக்கொள்ள தூண்டுகிறதா?

1. யோசேப்பு (ஆதி 39:9)

2. எபிரெய மருத்துவச்சிகள் (யாத் 1:15-17)

3. சர்தை சபை (வெளி 3: 2,3)

4. நாம் நேசிக்கிற, பயப்பட கூடிய, மரியதை செலுத்த கூடிய நபர் நம்மை பார்த்துக் கொண்டே இருக்கிறார் என்றால் நாம் என்ன செய்வோம்?

ஈ. தேவன் நம்மை பார்த்துக்கொண்டு இருக்கிறார் என்பது அவருக்கு நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதை காண்பிக்கிறதா? (எபி 4:12)

1. உலக ரீதியான கணக்கு வழக்குகள் எப்படி நடக்கும் என்பதை விவாதிக்கவும்?

2. தேவன் நமக்கு என்ன கொடுத்திருக்கிறார்? அதை கொண்டு என்ன செய்கிறோம்? என்பதற்கான கணக்கை கொடுக்க வேண்டும் (மத் 23:15-26)

3. தேவன் நம்முடைய இருதயங்களின் எண்ணங்களை நன்றாய் அறிந்திருக்கிறார் (எரே 32:19). தேவன் கொடுத்திருக்கின்றவைகளுக்காக நாம் உண்மையுள்ளவர்களாய் இல்லையென்றால் அதற்கான பலனை பெற்றுக்கொள்ள வேண்டும்.

உதாரணம்: இஸ்ரவேல் ஜனங்கள் (எபி 3:7-19)

உதாரணம்: லோத்துவின் மனைவி (ஆதி 19:16,26)

4. தேவன் நமக்கு என்னவெல்லாம் கிருபையாய் கொடுத்திருக்கிறார்? அதற்கான வழியையும் சிந்தித்து பார்ப்போமா?

**2. உண்மையாகவே தேவனுடைய மனுஷர்களை தேவன் போஷிக்கிறார் (1இரா 17:4; 17:9-16)**

அ.போஷித்தல் (அல்லது) போஷிக்கப்படுதல் என்பதை புரிந்துக்கொள்ளுதல்

(எபி 5:9)

1. பராமரிப்பது, ஆகாரம் கொடுத்து ஆதரிப்பது, காப்பாற்றுவது,

2. தன் குஞ்சுகளுக்காக உணவை தேடி தன் குழந்தைகளின் பசியை போக்கும் தாய் பறவை சிந்தித்து பாருங்கள் (சங் 81:10)

3. தேவனுடைய வார்த்தையின் படி நடக்கிற அவருடைய பிள்ளைகளை அவர் போஷிக்கிறார் (சங் 81:13)

அ. கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் (சங் 128)

ஆ. ஆபிரகாம் (ஆதி 13:2; ஆதி 24:35)

குறிப்பு: ஆபிரகாமுக்கு கொடுத்திருக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதமாக நீங்கள் நினைப்பது என்ன? (ஆதி 15:2–6) இதிலிருந்து நாம் என்ன புரிந்துக்கொள்ள முடிகிறது ?

இ. எபிரெயர் 11:6 பார்க்கவும்

ஆ. போதுமென்ற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் (1தீமோ 6:6)

1. அத்தியாவசியமான நம்முடைய சரீரத் தேவைகள் நிறைவேற்ற படுவதே நமக்கு திருப்தியை தர வேண்டும் (1தீமோ 6:8; எபி 13:5)

2. பவுலைபோல மனோரம்மியமாக இருக்க கற்றுக்கொள்ள வேண்டும் (பிலி 4:11)

3. போதுமென்ற மனம் , பொருளாசையெனும் , சோதனையை அகற்றுகிறது (எபி 13:5) , அதற்கு நேர் மாறாக , பொருளாசையானது திருப்தியின்மையைத்தூண்டுகிறது சந்தோஷமாயிருப்பதற்கான சகல காரணங்களும் இருந்தாலும் பொருள் ஆசையினால் கெட்டுப் போனவர்களுக்கான உதாரணம்

அ. ஏதேன் தோட்டத்தில் ஏவாள்

ஆ. நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை இச்சித்த ஆகாப் ராஜா (1இராஜா 21)

இ. இஸ்ரவேலர் எடுக்கக் கூடாதென கட்டளையிட்ட கொள்ளைப் பொருளை எடுத்த ஆகான் (யோசுவா 7)

ஈ. எலிசாவின் வேலைக்காரன் கேயாசி (2இராஜா 5:20–27)

இ. நம்முடைய விதைத்தலும் தேவனுடைய கரமும் (பிர 11:1; 2கொரி 9:10)

1. தேவனுடைய மனிதர்கள் சோம்பேறியாய் இருப்பது தேவனுக்கு பிரியமானது அல்ல (மத் 25:26)

2. நம்முடைய கையினால் நலமான வேலை செய்து தேவனுடைய சபையை தாங்க வேண்டும் (1தெச 4:12; 2தெச 3:8)

3. அதிகம் கொடுப்பதற்காக நமக்கு இருக்கிறதா ? இல்லையென்றால் அதற்கான காரணம் என்ன உண்மையாகவே ஆசீர்வதிக்கப்படும் மனிதர் யார் ? (அப் 20:35)

1. ஒபதியா 18:3-4; 13
2. சாரிபாத் விதவை (1 இராஜா 17:14)

3.சூனேமியாள் (2 இராஜா 4:12-13)

4. தேவனுடைய மனிதனின் விதையையும்,விதைத்தலையும் தேவன் ஆசீர்வதிக்கிறார் (ஆதி 26:12-13)

**3.தேவனுடைய மனுஷன் தேவனுக்கு பணிவிடை செய்யவேண்டும் (ஊழியம்) (1இராஜா 18)**

அ. ஊழியர் , ஊழியம் என்பதை புரிந்துக்கொள்ளுதல் (யோவான் 13:16 ;எபே 6:8 ; 1தெச 2:4;கலா 1:10)

1. ஊழியம் என்பது தேவனுடைய மனுஷன் தேவனுக்கு செய்ய வேண்டியது அதை அவனால் செய்யாமல் இருக்க முடியாது ? (அப் 4 :20) அதாவது அவன் தேவனுக்கு சேவை செய்பவனாக இருக்கிறான் (எரே 20:9; ஏசா 6:8) பார்க்கவும்

2.கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாக இருப்பதை தூதர்களாக இருப்பதன் முக்கியத்துவத்தை தேவனுடைய மனுஷன் அறிந்திருப்பான் (2கொரி 5:10)

3.ஊழியராக விரும்புவதற்கான தவறான காரணம்

- முதன்மையாக இருக்க வேண்டும் என்பதற்காக (3 யோவான் 9)
- பெற்றோர் மற்றும் குடும்பத்தினரின் வற்புறுத்தல்
- எளிதாக பணம் சம்பாதிக்க ஒருவாய்ப்பு (1 தீமோ 6:5; ரோமர் 16:18;அப் 8:18,19)
- சோம்பேறித்தனத்தினிமித்தம் (நீதி 15:19 ;நீதி 20:4; நீதி 26:14)
- புகழ்ச்சி கிடைக்கும் என (மத் 23:8,9)
- மற்றவர்களை கண்டிப்பதிலே சிலருக்கு சந்தோஷம் கிடைத்தல் (மத் 23:4)
- தன்னை திறமையாகவும் , தியாகவனாக காண்பித்துக்கொள்ளும் படி (1கொரி 1:25;4:10)
- அதிகாரத்தை நாடுவது

ஆ. தேவனுடைய வார்த்தையே பேசுதல் அவர்களை சரியான பாதையில் நடத்துதல் (1இராஜா 18:17-39; 1இராஜா 22:7-24)

1.இன்று காணப்படும் தவறான உபதேசங்களை விவாதிக்கவும் .

2.இரட்சிபை பற்றி உண்மையையும் அதைபற்றிய தவறான உபதேசத்தையும் விவாதிக்கவும்.(மாற் 15:16; அப் 2:38-47;1பேதுரு 3:21)

3.தேவனுடைய வார்த்தையை தேவனுடைய வார்த்தையாகவே பேசுதல் (2கொரி 2:17)

4.கள்ளஉபதேசங்களை அதிகமாகயிருப்பதற்கும் ;அதிலே ஜனங்கள் பிரியப்படுவதற்கும் காரணம் என்ன என்பதை குறித்து விவாதிக்கவும் .

- அறியாமை காரணமா? (2பேதுரு 3:16)
- மக்களை பிரியப்படுத்தி அவர்களை தங்கள் பக்கமே வைத்துக்கொள்வதற்காகவா ? (அப் 13:6-8)
- இழிவான ஆதாயத்துக்காக (2பேதுரு 2:2,3)
- சுயநலமா? (1தீமோ 4:3,4)
- அல்லது வேறே காரணங்களா ?

இ.தேவனுடைய மனுஷன் ஜனங்களின் பாவங்களை அவர்களுக்கு காண்பிக்கிறான் (1இராஜா 18:21)

1.பாவத்தினால் குருடாக்கப்பட்ட மக்களின் கண்களை திறக்கிறவன் (அ)
மயக்கத்திலிருந்து வெளியே கொண்டுவருகிறவன் (2தீமோ 2:24-26)

2.அவர்களுக்கான உண்மையான வழியை காண்பிக்கிறான் (1 கொரி 11:1)

3. சீர்ப்பொருத்தவே பண்ணுகிறான் (கலா 6:1; கலா 5:15)

ஈ. உண்மையான ஊழியர்கள் குறைவாக இருக்கலாம். ஆனால் தேவன் அவர்கள் பக்கம் இருக்கிறார் ( 1இராஜா 18:22 – 39 )

1. பகால் தீர்க்கதரிசிகள் அநேக நபர்கள் இருந்த போது உண்மையான தேவனுடைய மனுஷர்கள் குறைவாக இருந்தது போல தோற்றம் கொடுத்திருக்கலாம். ஆனால் உண்மையான தேவனுடைய மனிதர்கள் அநேக பேர் இருக்கின்றனர். ( 1 இராஜா 19:18; எபி 12:22-24; 1 இராஜா 18:22)

2. கேட்டிற்கான வாசல் பெரியதாகவே இருக்கிறது. (மத் 7:13,14)

3. கள்ள தீர்க்கதரிசிகள், கள்ள போதகர்கள் பெருகி இருந்தாலும் அவர்களால் வெற்றிக் கொள்ள முடியாது.

4. கள்ள தீர்க்கதரிசிகளும், கள்ள போதகர்களும் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறார்கள் என்பதை 2 பேது 2:10-18 யிலிருந்தும் யுதா 10-16 யிலிருந்தும் பட்டியலிடவும்.

5. உண்மையான ஊழியக்காரன் கள்ள போதகர்களை ஆவிக்குரிய ரீதியில் வெட்டிப் போடுகிறான். ( 1 இராஜா 18:40; அப் 13:10,11; வெளி 11:5). தேவனுடைய வார்த்தை பட்டயமாக இருக்கிறது (எபி 4:12)

**4. தேவனுடைய மனுசன் மனதாழ்மையுள்ளவனாக இருக்கிறான் (1 இராஜா 18:41-46).**

அ. மனதாழ்மையை புரிந்துக்கொள்ளுதல்:

1. தாழ்மை எப்பொழுது வரும்?

பேதுருவிற்கு எப்பொழுது வந்தது ? (லூக் 5:8,9)

எசாயாவிற்கு எப்பொழுது வந்தது ? (எசா 6:5)
ஆயக்காரனுக்குள் எப்பொழுது வந்தது ? (லூக் 18:13)
பவுலுக்கு ( 1தீமோ 1:13–16)

2. தேவனுடைய வல்லமையையும், மனிதனுடைய இயல்பையும் புரிந்துக்கொள்ளும் போது தாழ்மை வருமா?

ஆ. தாழ்மை கீழ்படிதலை கொண்டு வருகிறது (1 பேது 5:5–7; யாக் 4:6,7). கீழ்படிதல் உயர்வை கொண்டு வருகிறது

1. நோவா (ஆதி 6:22)
2. தாவீது (சங்கீதம் 51 )
3. மோசே (எண் 12:1–13)
4. இயேசு கிறிஸ்து (எபி 5:8,9)

இ. நமக்கு நாமே ஞானிகளாய் இராமல், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிவோம். (நீதி 3:7)

ஈ. இயேசு சீஷர்களின் கால்களை கழுவியதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? (யோவா 13)

உ. கீழ்படிதல் மற்றும் மனதாழ்மைக்கு இயேசு ஒருவரே மாதிரியாயிருக்கிறார் (பிலி 2:5–9). அவரை போல நம்முடைய ஓட்டத்தை தாழ்மையாக முடிக்க முயற்சி செய்வோமா?

**முடிவுரை:**

தேவனுடைய மனிசனாகிய நாம் நம்முடைய வேலையை புரிந்துக்கொள்வதற்கான இந்த சிறிய முயற்சி எலியாவை போல தேவனை பிரியப்படுத்துவதாக இருந்திருக்கும் என நம்புகிறேன்.